# சபாநாயகருக்கெதிரானமனுமீதுஇன்றுவிவாதம்

(கொழும்பு)
சபாநாயகர் எம். எச். முகமட் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று காலை நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்
(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 24 | இதழ்: 241
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 10-10-1991


## சபாநாயகருக்கு பூரண ஆதரவு

(கொழும்பு)
சபாநாயகருக்கு எதிராக இன்று நாடாளுமன்றம் வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அதனைத் தோற்கடிப்பதென ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.
(4ம் பக்கம் பார்க்க)

## லலித், காமினி மீண்டும் ஐ. தே. க.வில்

(கொழும்பு)
லலித், காமினி கோஷ்டியினர் மீண்டும் ஐ.தே.க.வுடன் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

திரு லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா உட்பட ஏழு பேர் மீண்டும் அரசுடன் ஒத்துழைப்பு வழங்க முன்வந்
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ அரசுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை

# மீண்டும் நாடாளுமன்றம் வரும்

## எதிர்க்கட்சிகள் அறிவிப்பு

(கொழும்பு)
அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீண்டும் ஐந்து நாட்களின் பின் நாடாளுமன்றிற்கு கொண்டுவரப்படுமென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளதாக 'ஏஜென்ஸி, செய்திகள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றில் இப்பிரேரணை மீது விவாதம் நடாத்த நேற்று பிரதிச் சபாநாயகர் அனுமதித்திருந்த போதும் எதிர்க் கட்சிகள் இதற்கு மறுத்ததுடன், 5 நாள் அவகாசமும் கோரியிருந்தன. ஆனால் அதனை மறுத்த பிரதிச் சபாநாயகர் கால அவகாசம் வழங்க மறுத்துவிட்டார்.

சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் இன்று முடிவுற்றதும், அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை நடாத்தும்படி தாம் கள் வற்புறுத்தப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது. (இ-153)

## ஈ. பி. ஆர். எல். எவ். மீது 'பிரேமா' தாக்கு

(கொழும்பு)
ஈ. பி. ஆர். எல் எப். கட்சியின் தற்போதைய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று பலத்த கண்டனம் தெரிவித்தள்ளார்.

இலங்கையின் ஐக்கியத்தையும், ஒற்றை ஆட்சியையும், இறைமையையும் பேணுவதாக வாக்களித்தபின்பு தேசத்
(4-ம் பக்கம் பார்க்க)

## பிரேரணை காலாவதியானதாக பிரதி சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)
அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவிருந்த நம்பிக்கையில்லா பிரேரணை காலாவதியாகிவிட்டதாக பிரதி சபாநாயகர் திரு காமினிபொன்சேகா நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் திரு காமினி பொன்சேகா தலைமையில் கூடியபோது அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கினர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் முகமட் சபைக்கு வரவில்லை

(கொழும்பு)
நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமட் நேற்று நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.

தமக்கு எதிராகக் கொண்டு வருவதற்கு எதிர்க் கட்சிகள் தீர்மானித்திருக்கும் நம்பிக்கை
(4-ம் பக்கம் பார்க்க)

## முகமட் மீதான விவாதமே முக்கியம்

(கொழும்பு)
அரசு மீதான நம்பிக்கையிலாப் பிரேரணையை விட, சபாநாயகர் எம். எச். முகமது மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையே இன்றைய நிக
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இதுவரை அமுலில் இருந்துவந்த ஊரடங்குச்சட்டம் நேற்று மாலை 6-00 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (க)

## கடந்த எட்டு வருடங்களில் 90,000 தமிழர் சிங்களவர் பலி

### புரட்சிகர தொழிலாளர் கட்சி அறிக்கை

(கொழும்பு)
நாடு முழுவதிலும் கடந்த எட்டு வருடங்களில் 50,000 தமிழர்களும் 40,000 சிங்களவர்களும் அரச படைகளின் தாக்குதலினால் கொல்லப்பட்டுள்ளதாக 'புரட்சிகர தொழிலாளர்கட்சி' அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து இயங்கும் இக்கட்சி விடுத்த நீண்டதொரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை ஜெயவர்த்தனா அரசும், பிரேமதாஸா அரசும் கொடூரமாக ஒடுக்க முனைந்து வந்துள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## 30 மாதங்களில் 2,815 பேர் பலி!

(கொழும்பு)
இலங்கையில் தொடரும் வன்செயல் நடவடிக்கையினால் கடந்த ஜூன் மாதத்திற்கு முற்பட்ட 30 மாதங்களி
(4-ம் பக்கம் பார்க்க)

## அனலைதீவு, எழுவைதீவில் படையினர் தரையிறக்கம்

(புங்குடுதீவு)
அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளில் பெருமளவிலான ஸ்ரீலங்கா ராணுவத்தினர் இறக்கப்பட்டு முகாம் அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவு பகுதியிலிருந்து கடலில் குதித்து குறிகாட்டுவான் வந்தடைந்த இளைஞர் ஒருவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் இவ்விரு தீவிலும் பெருமளவு படையினர் தரையிறக்கப்பட்டு முகாம்களை அமைத்துள்ளனராம்.

இதேவேளை நெடுந்தீவு,
(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் அரசு பேச்சுக்கு நடுநிலை வகிக்கத் தயார்!

(லண்டன்)
விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சு வார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் நடுநிலைமை வகிக்க தாங்கள் தயாராயிருப்பதாக ,பிரிட்டிஷ் கிறிஸ்தவ தரும உதவி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி கேசுடன் (Gold Frame) யாழ் - சி சேலக்கும், யாழ் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு அலுவலகத்தில் ஒப் படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் [சி-5456]

### வைத்திய நிலையம்

புளியங்கூடல் சந்தியில் சேவையாற்றிய நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிக மாக யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி கொட்டடி றோட்டில் இயங்கிவருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். தலைமை நிலையம்: வேலணைத் துறையில் டாக்டர் ஐயம் பிள்ளை கந்தையா. (சி-5455)

### நாடக நூல்கள்

பரிசளிப்பதற்கும், விழாவில் நடிப்பதற்கும் பொருத்தமான 19 நாடகங்களைக் கொண்ட நூல்கள். அராலியூர் சுந்தரம் பிள்ளை எழுதிய கெட்டிக்கா ரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/-. எங்கும் கிடைக்கும். [சி-5460]

### மணமகன் தேவை

யாழ். இந்து, குற்றமற்ற 31 வயது உயர்ந்த படிப்புள்ள பெண்ணுக்கு A/L, Bcom, Bsc. கணக்காளர், எஞ்சினி யர் மணமகன் Sponsor உடன் கனடாவில் உயர்ந்த வேலை பெற விரும்பினால் ஞாயிற் றுக்கிழமையில் சந்திக்கவும். மங்கள ஏஜென்சி, கொய் யாத்தோட்டம். (சி-5464)

---

## NEW MASTER INSTITUTE
JAFFNA.

## 93 A/L

★ (விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்:
**19-10-1991**
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்

★ தாமதிக்காது உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

(ஏ-1641)

---

### பிரிவுபசாரம்
(சாவகச்சேரி)

கொடிகாமம் அரசினர் வித் தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் திருமதி சி. நடரா சாவுக்கு வித்தியாலய ஆசிரி யர்களாலும மாணவர்களா லும் சிறப்பான பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது.

### பரீட்சை
(கொழும்பு)

இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக் கான பரீட்சை கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகங் களில் நடைபெறுமென பல் கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. [153]

---

## விபரங்கள் சேகரிப்பு

(சாவகச்சேரி) பச்சிலைப்பள்ளிப்பகுதியிலுள்ள உடல் ஊனமுற்றோர் மனே நிலை பாதிக்கப்பட்டோர் பரா மரிப்பு அற்ற நிலையில் உள்ள சிறுவர்கள் வயோதிபர்கள் ஆகியோர் பற்றிய விபரங்கள் பளைப்பகுதி கிராமசேவை அலு வலர்களினுல் திரட்டப்படுகின் றன.

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி
# அந்தியேட்டி அழைப்பு



| தாயின்மடியில்:- | தாயகமண்ணில்:- |
|---|---|
| 22-01-1973 | 13-07-1991 |

## கப்டன் ஜஸ்ரின்
## (கிருஷ்ணபிள்ளை சுதாகர்)

சொந்த மண்ணின் சோகம்துடைத்திட
சூழ்ந்து நின்ற பகையை முடித்திட
சிந்தும் குருதியில் ஈழம் படைத்திட
சென்ற ஜஸ்ரினின் நாமம் நிலைத்தது!

கொற்றாவத்தை,
பூமகள் சனசமூக நிலைய
இளைஞர்கள்

ஆனையிறவில் விடுதலைக்காய் மரணித்த 4 வேங்கை களுக்கும் எமது அஞ்சலிகள்.

10-10-1991 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் உறவினர்கள், நண்பர்கள் போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண் ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

கொற்றாவத்தை,
கட்டைப்புளியடி,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(சி-5465)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்

சுழிபுரம் கிழக்கு
அமரர்
## ஆறுமுகம் கந்தையா (தாத்தா)
[பிரபல விவசாயி]

| சோழியபுர மண்ணில்: | விண்ணகபுர மண்ணில்: |
|---|---|
| 1906-02-06 | 1991-09-10 |

நல்லவராய், வல்லவராய், இனியவராய் எம்மை வாழவைத்து விண்ணகம் சென்ற எங்கள் ஒளிவிளக் குத் தாத்தாவே! தெய்வப் பெருவாழ்வு அடைய பறுளை ஈசுர விநாயகனின் திருவடியினை இறைஞ்சு றோம்.

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் "சோழியபுரத்தில்" என்றும் அலை மோதும்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் நேரில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், வேண்டிய உதவிகள் செய்தோருக்கும், ஏனையோருக் கும் எமது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

10-10-91 வியாழக்கிழமை (இன்று) "பத்ம பவ னத்தில்" நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

"பத்ம பவனம்"
சோழியபுரம்,
சுழிபுரம்.
[கி 1646]

மூ. கந்தசாமி,
சி. பிறைசூடிக் குரு,
பி. பத்மநாயகி,
பி. சோழலக்ஷ்மி,
பி. சோழகுமாரன்,
பி. சோழராஜன்.

---

உ
முருகன் துணை

நாதஸ்வர மேதை, நாதஸ்வர கலாநிதி
கலாசூரி

## திரு. என். கே. பத்மநாதன்
அவர்களின்

# மணி விழா அழைப்பு

**இடம்:** நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபம்.

**காலம்:** பிரசோற்பத்தி ஆண்டு புரட்டாதி மாதம் 28ஆம் நாள் (14-10-1991) திங்கட்கிழமை காலை 9 மணி முதல், அறுபதாம் கல்யாண வைபவம். 14, 15, 16-10-1991 மாலை 3 மணி முதல் மணிவிழாக் கலை நிகழ்வுகள்.

★ இதனையே தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு வருகை தருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தனிப்பட்ட கௌரவங்கள் செய்யவிரும்புவோர் மணிவிழாக் குழுவுடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

| தலைவர் | இணைச்செயலாளர்கள் |
|---|---|
| இ. ஜெயராஜ் | பொன். சுந்தரலிங்கம் |
| | வீ. கே. பஞ்சமூர்த்தி |

மணிவிழாச் சபை
கேணியடி, திருநெல்வேலி. [சி-5462]

---

கரைச்சி தெற்கு
# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கிளிநொச்சி

மேற்படி எமது சங்கத்திற்கு பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண் ணப்பிப்போர் தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு தபாலின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 24-10-91 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும். கீழ் வரும் தகைமைகளுக்கு அமைவாக உள்ள விண்ணப் பங்கள் மாத்திரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் (101/6)**

**சம்பள அளவுத் திட்டம்:**
1305 – 60 X 04 – 75 X 11 – 2370 ம் அங்கீகரிக் கப்பட்ட படிகள் யாவும்.

**01. கல்வித்தகைமைகள்:**

[அ] கூட்டுறவு ஊழியர் 7வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் மூன்று வரு டங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 08வது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் ஆறு வரு டத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல் லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப தாபனமொன் றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப தாபன மொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. வயது:** 25 தொடக்கம் 50 வரை.

**முக்கிய குறிப்பு:**

[01] சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்க ளினதும், அனுபவச் சான்றிதழ்களினதும், கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப் படல் வேண்டும்.

[02] மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையவர்கட்கு 06-11-1991 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சை எமது சங்கக் காரியாலயத்தில் [கண்டி வீதி, கிளிநொச்சி] நடைபெறும்.

சி. இராசகுலசிங்கம்
தலைவர்

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
(எ 1645) 05-10-1991

'வெளிச்சம்' வெளியீட்டு விழாவில்

# இலக்கிய சேவையாற்றிய எழுத்தாளர் கௌரவிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் வெளியிடும் கலை, இலக்கிய, சமூக இதழின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 12ம் திகதி சனிக்கிழமை காலை 9-30மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வரவேற்புரையை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனும், வெளியீட்டுரையை திரு. பொன். பூலோகசிங்கமும் நிகழ்த்துகின்றனர்.

வெளிச்சம் பற்றிய ஆய்வுரையை திரு. சொக்கனும், சிறப்புரைகளை கவிஞர் இ. முருகையன், திரு. அ. யேசுராசா, திருமதி கோகிலா மகேந்திரன் முதலியோரும் ஆற்றுகின்றனர்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியில் இம்மண்ணுக்கு இலக்கிய சேவையாற்றிய மூதுபெரும் எழுத்தாளர்களான அ. செ. முருகானந்தம், அகிலேஸ் ஆறுமுகம், ஆகியோர் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டு கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டபின்னர் திரு. சி. கருணாகரன் நன்றியுரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர். அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

# உதைபந்தாட்டப்பயிலுநருக்கு தமிழ்மொழி மூலம் பயிற்சி

(மட்டக்களப்பு)

சம்மாந்துறையில் முதல் தடவையாக தமிழ்மொழி மூல உதைபந்தாட்டப் பயிலுநர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த வாரத்திலிருந்து நடைபெற்று வருகின்றது.

உதைபந்தாட்டத் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டுத் துறை அமைச்சினால் நடாத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்புகளில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அம்பாறை போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகிறார்கள். (71)

# சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நிர்ணயத் துறை திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த இரு மாதங்களாக சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லையெனக் கூறப்படுகின்றது.

மேற்படி திணைக்களம் அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு மாற்றப்பட்ட பின்னே, தமக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளதாக திணைக்கள ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள். (வி)

# இராசி பலன்

வியாழக்கிழமை

10-10-1991

தமிழுக்கு புரட்டாதி 24

திருதியை பி. இ. 3-25 வரை

சுவாதி மு ப. 10-31 வரை.

இராகுகாலம் பகல் 1-32 முதல் 3-02 வரை.

சுபநேரம் காலை 7-32 முதல் 9-02 வரை.

மேடம்- தொழில்பாராட்டு, புதிய வசதி, வெற்றிவாய்ப்பு.

இடபம்- இல்லற சுகம், இஷ்டவார்த்தை, சுபகாரியம்

மிதுனம்- மனவிரக்தி, கருத்துமோதல் வேலைப்பளு.

கடகம்- தொழில் தகராறு, விதண்டாவாதம், மறதி.

சிங்கம்; தொழில் லாபம், அறிமுகதலீடு, ஆடம்பரம்

கன்னி- நண்பர்பகை, வீட்டில் துன்பம், கவலை

துலாம்- இனசன வரவு, பணஉதவி, குடும்பசுகம்.

விருச்சிகம்- கண்ணில் ரோகம், தாய்ப்பாசம், செலவு.

தனுசு- விடாமுயற்சி, மனக்கூட்டம், அதிபர் நேசம்.

மகரம்- அறிஞர் சந்திப்பு, குடும்ப உல்லாசம், பயணம்,

கும்பம்- நோய் தணியும், அதிகாரிகள் பாராட்டு, காரிய சித்தி.

மீனம்- ஒத்துவராமை, வழிதவறுதல், மனச்சுமை

ஜோஸ்யர்

# நடமாடும் செயலகம் இன்று அல்வாயில் இயங்கும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கான 'நடமாடும் செயலகம்' இன்று 10ம் திகதி வியாழக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர், பருத்தித்துறை உதவி அரச அதிபர் திரு. செல்வ ஸ்ரீனிவாசன், மருதங்கேணி உதவி அரச அதிபர் திரு. எஸ். வேதீஸ்வரன், கரவெட்டி உதவி அரச அதிபர் திரு. ஆர் ஐயாத்துரை, கோப்பாய் உதவி அரச அதிபர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை ஆகியோரும், செயலக அதிகாரிகள், யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களத் தலைவர்கள், முக்கிய அதிகாரிகளும் இந்நடமாடும் செயலகத்தில் சமுகமளிப்பர்.

பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுகளில் வாழும் பொதுமக்கள் இந்நடமாடும் செயலகத்தைப் பயன்படுத்தி தமது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முன்வரும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். (52)

# இன்று

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று 10ம் திகதி வியாழக்கிழமை பி. ப 4 மணிக்கு தலைவர் திரு. கோ. தியாகராசா தலைமையில் சமாசப் பணிமனையில் நடைபெறும்,

0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க அதிபர் பிரிவு பிராந்திய மகளிர் புதிய நிர்வாக தெரிவுக் கூட்டம் வண்ணையூர் உம்குறுக்குத் தெருவிலுள்ள சமூக மேம்பாட்டுக் கழகப் பணிமனையில் இன்று 10 ம் திகதி வியாழக்கிழமை பி ப. 3 மணிக்கு திருமதி ஞானசோதி மகாராஜா தலைமையில் நடைபெறும். (15)

வெள்ளவத்தை கொள்ளை:

# எதிரணி முக்கியஸ்தர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

வெள்ளவத்தை கொள்ளைச் சம்பவமொன்று தொடர்பாக எதிரணிக்கட்சியொன்றின்முக்கியஸ்தர் ஒருவர் பொலிசாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஆயுதக் கொள்ளை தொடர்பாக, வெள்ளவத்தையில் 3 மாதங்களுக்கு முன்னர் 4 இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த முக்கியஸ்தர் விசாரணைக்காக குற்றத்தடுப்பு பிரிவினரால் கடந்த திங்கள் இரவு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 4 இளைஞர்களில் ஒருவர் இவர் வழங்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே கொள்ளைகள் நடாத்தப்பட்டதாகவும் பேரில் எனவும் தெரியவந்துள்ளது. இவருக்கு பாதுகாப்புக்கு பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

KALALAYAAH

கலாலயா

# இசை, நடன வகுப்புகள்

- சங்கீதம்
- வயலின்
- வீணை
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- பரதநாட்டியம்

ஆரம்பம்: 17-10-1991 பி. ப. 3-00 மணி.

[விஜயதசமி அன்று]

விபரங்களுக்கு:

## கலாலயா

விக்டோரியா வீதி,

(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

யாழ்நகர். (A1647)

★ இதோ! வெளிவந்து வேகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!!

சிவம் இன்டஸ்றீஸாரின்

நவீன

## தீபாவளி வாழ்த்து மடல்கள்

விலை விபரம்

| | | |
|---|---|---|
| No. 1 கட்டிங் காட் 100க்கு | | 1350 . 00 |
| No, 2 போட் காட் 100க்கு 10X7 | | 1250 . 00 |
| No. 2 பேப்பர் காட் 10X7 100க்கு | | 600 . 00 |
| No. 3 கட்டிங் காட் | ,, | 750 . 00 |
| No. 4 போட் காட் 7X5 | ,, | 550 . 00 |
| No. 5 கட்டிங் காட் | ,, | 550 . 00 |
| No. 6 பெரிய இரு மடிப்பு | ,, | 550 . 00 |
| பெரிய போஸ் காட் | ,, | 250 . 00 |
| சிறிய போஸ் காட் | ,, | 150 . 00 |
| சுவாமி போஸ் காட் | ,, | 150 . 00 |

★ வாடிக்கையாளரின் கவனத்திற்கு: எமது ஸ்தாபனம் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலினால் கீழ்க்கண்ட விலாசத்தில் இதே விலையில் வாழ்த்து மடல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ரகுநாதன் பதிப்பகம்

No. 3, நவீன சந்தை,

யாழ்ப்பாணம். (சி5461)

★ 10 வயது முதல் 30 வயதானோர்

மன்னார் தீவிலிருந்து வெளியேற

# படையினர் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார்த்தீவிலிருந்து 10 வயது முதல் 30 வயது வரை உள்ள ஆண்களும் பெண்களும் வெளியேறக் கூடாதென இராணுவம் தடைவிதித்துள்ளதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

ஏனையோர் மன்னாரிலிருந்து வெள்ளிக்கிழமை மாத்திரம் வெளியேறலாம். வெளியிலிருந்து மன்னாருக்கு வருவோர் திங்கட்கிழமைஉள்ளேவரலாம் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

இங்கு 84 தொலைபேசித் தொடர்பு இருந்தும் அவைகள் துண்டிக்கப்பட்டு அரசாங்க அதிபர், உதவிப்பொலிஸ் அதிபர், இராணுவத்தளபதி ஆகிய மூவருக்குமே தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து அகதிகள் மன்னார்த்தீவுக்கு வந்தால், அவர்களைத் தங்கவைப்பதற்காக தலைமன்னாரிலுள்ள அரசாங்கக் கட்டிடங்களும், புகையிரத திணைக்களக் கட்டிடங்களும் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

ஆஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை நிபுணர் இல்லாததால் சிறு காயங்களுக்குக்கூட அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. பல் வைத்தியர் ஒருவரும் இல்லை. (152)

### கடந்த எட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 8 வருடத்தில் வடக்கு - கிழக்கில் 50,000 தமிழர்கள் அரசபடைகளால் கொல்லப்பட்டனர். அதே போன்று கடந்த 3 வருடங்களில் தென்பகுதியில் சுமார் 40,000 சிங்களவர் கொல்லப்பட்டதுடன் பலர் காணாமல் போய்விட்டனர்.

மேற்படி இரு அரசும் தமிழர், சிங்களவரின் நியாயமான போராட்டங்களையும், உரிமைகளையும் படைகளின் பலத்தைக் கொண்டு அடக்கிவந்துள்ளன. இதனை தகர்த்தெறிய அனைவரும் முன்வரவேண்டுமென்றும் இக்கட்சி கோரியுள்ளது. (சி)

கிராமசேவகர் நியமனம்

# இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலும் கிராம சேவகர்கள் நியமனங்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு அரசாங்கமிருந்து அறிவித்தல் வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

கிராமசேவகர் பதவியில் திருத்தம் ஒன்று மேற்கொள்ள விருப்பதால், இந்நியமனங்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. (152)

### அனலைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கான குறிகாட்டுவான் படகுசேவை கடந்த முதலாம் திகதியிலிருந்து படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (101)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் தலைவர் திரு தனிநாயகம் அடிகளாரின் முத்தமிழ் மன்றம், நாளை கல்லூரி மதுரம் சதுக்கத்தில் முத்தமிழ் விழாவை கொண்டாடவுள்ளது.

மேற்படி விழாவுக்கு அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். (வி)

### சபாநாயகர் முகமப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை தாம் நாடாளுமன்றத்துக்கு வரப்போவதில்லை என அறிவித்திருப்பதாகவும், பிரதி சபாநாயகர் நேற்று சபையில் தெரிவித்தார்.

### ஈ. பி. ஆர். எல். எவ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரோகமானதும் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தை பிறப்பித்ததன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்களை நடாத்தியதுடன், அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளையும் சீர்குலைத்தவர்கள் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். (வி)

### லலித், காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாகவும் ஒருவர் மட்டும் விரும்பவில்லை என்றும் தெரிய வருகிறது.

மீண்டும் இவர்கள் அரசுடன் சேர்ந்தால் ஐ.தே.க.விலிருந்து நீக்கப்பட்டுள்ள உத்தரவை வாபஸ் பெறவும் ஐ.தே.க. தயாராக உள்ளதாம். (சி)

### சபாநாயகருக்கெதிரான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றச்சாட்டுப் பிரேரணையை முதலில் ஏற்றுக்கொண்ட சபாநாயகர் பின் அதனை நிராகரித்ததன் மூலம் தனது கண்ணியத்தை தவறவிட்டதாகக் கூறி அவர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தன.

நேற்று மாலை நாடாளுமன்றத்தில் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்தப் பிரேரணையை இன்று விவாதத்துக்கு எடுப்பதென தீர்மானித்தனர்.

இந்த விவாதத்திற்கு 12 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி-153]

தீவுப் பகுதியில்

## படை பலம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி கடற்பிராந்தியங்களில் கடற்படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததை தொடர்ந்தே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு பகுதிகளில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படை முகாம்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார். (வி)

ஆறு மாதமாகியும்

# அடையாள அட்டை கிடைக்கவில்லை

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்குக் கடந்த ஆறு மாதமாகியும் மேற்படி அட்டை வந்துசேரவில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து யூலை வரை சுமார் ஐயாயிரம் அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதுவரை தேசிய அடையாள அட்டை உரியவர்களுக்கு வந்து சேராததனால் சம்பந்தப்பட்டவர்கள் யாழ். செயலகத்துக்கும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகிறது. (71)

### 30 மாதங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் 2,815 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 2,436 பேர் படுகாயமடைந்ததாகவும் புனர்வாழ்வு அமைச்சர் திரு பி. தயாரத்ன தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1989 ஜூன் முதல் 1991 ஜனவரிவரை உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு 40 கோடியே 20 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் உயிரிழந்தோரில் எவ்வளவு பேர் இராணுவத்தினர் என்பது பற்றிய தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (க)

### பிரேரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் எதிர்க்கட்சித்தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித்தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அதற்கு, "முதலில் சபாநாயகருக்கு எதிராகக் கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்குப் பிறகே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும் எனவும் கேட்டார்.

ஆனால் பிரதி சபாநாயகர் இதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

இதனையடுத்து அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எதிர்க்கட்சியினரால் எடுத்துக்கொள்ளப்படாததால் அது காலாவதியாகி விட்டதாக பிரதி சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா அறிவித்தார்.

### சபாநாயகருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் கூடிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை ஏகமனதாக மேற்கொண்டனர். (சி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சென்றுள்ள மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் திரு. மைக்கல்ரெயினர் இவ்வாறு பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பேச்சுக்களை, சர்வதேச உதவியுடன் தொடரவும் அல்லது காமன்வெல்த் தலைவர்களின் உதவியுடன் தொடரமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் கஷ்ட நிலைமை குறித்தும் இவர் கவலை தெரிவித்துள்ளார். (சி)

### முகமட் மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் மிகவும் முக்கியமானதும் அடிப்படையானதும் என்று நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையை நிராகரித்த சபாநாயகர் எம். எச். முகம்மது, ஜனாதிபதிக்கு சார்பாக நடந்துகொண்டுள்ளார். இந்த பிரேரணையை நிராகரிக்க முன் சபாநாயகர் ஜனாதிபதியை தனிப்பட்ட முறையில் சந்தித்துள்ளார்.

அரசு மீது நம்பிக்கையில்லாப்பிரேரணையைசபாநாயகர் தலைமையில் எப்படி நடத்த முடியுமென்றும் திரு. வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பினார். [153]

# கடற்படை அதிகாரிக்கு நயினை படை அஞ்சலி

(புங்குடுதீவு)

காரைநகர் கடற்பகுதியில் கடந்த வாரம் கடற்புலிகளினால் தகர்க்கப்பட்ட பீரங்கிப் படகிலிருந்து கொல்லப்பட்ட காரைநகர் கடற்படை அதிகாரியான 2ம் லெப்டினன் ரஞ்சித்என்பவருக்கு நயினாதீவு கடற்படையினர் அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் அனைவரையும் இந்த அஞ்சலியில் முழுமையாக கலந்துகொள்ள வேண்டுமென ஒலிபெருக்கி மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டு படையினர் வீடு வீடாக சென்று பலவந்தமாக மக்களை அழைத்து வந்தனர்.

அப்பகுதியிலுள்ள அனைத்து வீடுகள், கடைகள் எல்லாம் வெள்ளைக்கொடிகளை பறக்க விடவேண்டுமெனவும் பணிக்கப்பட்டனராம். (101)

நாதஸ்வர மேதை

# பத்மநாதனின் மணிவிழா நல்லூரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நாதஸ்வரமேதை திரு. என். கே. பத்மநாதனின் மணி விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் எதிர்வரும் 14, 15, 16ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 14ம் திகதி காலை மரபு ரீதியான மணிவிழாச் சடங்குகளும் 14, 15, 16ம் திகதிகளில் மாலை நேரங்களில் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

இவ்வைபவம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியுடன் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

# சுதந்திர கட்சியை ஸ்ரான்லி சாடுகிறார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் குழந்தைப் பிள்ளைத்தனமான விளையாட்டு இன்று அவர்களையே திருப்பி தாக்கியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான ஸ்ரான்லி திலகரட்ன, குற்றப்பிரேரணை நிராகரிப்பு பற்றி குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியினர் கொண்டு வந்த அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணை கடுமையான பாதகமான விளைவுகளுடன் அக்கட்சியை திருப்பித் தாக்கியதோடு பல பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளதாகவும் திரு. திலகரட்ண குற்றஞ்சாட்டியுள்ளார்.

திரு. பிரேமதாசா மீதான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் இவர் ஒருவரே கையொப்பமிடாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## பனம் நாற்றுக்கள்

பரிசோதனை முறையில் பனை அபிவிருத்திச் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட, இரண்டு வயதுடைய பனம் நாற்றுக்கள் நடுகைக்குத் தயாராக உள்ளன. இவற்றை நாட்டிப் பயன்பெற ஆர்வமுள்ள பொது ஸ்தாபனங்கள் மற்றும் தனியாருக்கு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு:- அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்

[ஏ-1648]


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தார் [illegible] 68-ம் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under licence Number B/10836/81.